# மேல்துண்டில் இருந்து பாடங்கள் (யோவான் 13:1-17)

தமது ஊழியநாட்கள் முழுவதிலும் இயேசு பரலோகத்திலிருந்து பெற்ற ஒரு கால அட்டவணையைப்பற்றி தெளிவான விழிப்புணர்வுள்ளவராயிருந்தார். அவருடைய தாய் ஒரு அற்புதம் செய்யும்படி கூறினபோது, "எனது வேளை இன்னும் வரவில்லை" (யோவான் *2:4*) என்று கூறினார். அவருடைய ஊழியநாட்கள் முழுவதிலும், அநேகமுறை "அவருடைய வேளை இன்னும் வராததினால்" (யோவான் *7:30; 8:20*), அவருடைய எதிரிகளால் அவரைப் பிடிக்க முடியவில்லை. அவருடைய ஊழியத்தின் கடைசி நாட்களில் "வேளை" வந்துவிட்டது என்பது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது:

> *அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: "மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது" (யோவான் 12:23).*
>
> *பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, ... (யோவான் 13:1).*
>
> *இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: "பிதாவே, வேளை வந்தது..." (யோவான் 17:1-2).*

நமது தற்போதைய பாடம் யோவான் 13ல் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. சிலுவையின் நிழலானது படிப்படியாகப் பெரிதாகித் தம்மை நெருங்குவதை இயேசு மிகவும் தெளிவாக உணர்ந் திருந்தார். இன்னும் பதினைந்து மணிநேரம் மட்டுமே உயிர் வாழக்கூடிய வாய்ப்பு அவருக்கு இருந்த நேரம் அது. "வேளை" வருமுன் தமது சீஷர்களுடன் அநேக விஷயங்களை அவர் பகிர்ந்துகொள்ள வேண்டியிருந்தது. அவருடைய

வெளியரங்கமான விளக்கவுரைகள் யாவும் முடிவடைந்து விட்ட நிலையில், மேல் வீட்டில் தமது சீஷர்களுடன் உள்ளார்ந்த உணர்வோடு சந்தித்து, அநேக முக்கியமான சத்தியங்களை அவர்களுடன் பகிர்ந்து, கலந்துரையாட இயேசு விரும்பினார். அந்த தனிமையான நேரம்பற்றி மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோர் அநேக விபரங்களைக் கொடுத்துள்ளனர்: கடைசி இராவுணவுக்கு ஆயத்தம் செய்தல், இயேசுவைக் காட்டிக் கொடுத்தல்பற்றிய முன்னுரைத்தல், கர்த்தருடைய இராப் போஜனத்தை ஏற்படுத்துதல் முதலியன. பின்னால் யோவான் எழுதும்போது, நன்கறியப்பட்ட இந்த விபரங்களையே அவர் மறுபடி எழுதிக் கொண்டிருக்கவில்லை (சகோதர சகோதரிகளாக ஒவ்வொரு ஞாயிறன்றும் கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ளும் போது நம்மால் இந்தச் சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நினைவு கூறப்படுகிறது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை). யோவான் இயேசுவின் மாபெரும் பிரிவுவேளைப் பிரசங்கத்தை விளக்கமாக எழுதியுள்ளார் (யோவான் 13-16). இதைத் தொடர்ந்து இயேசு தமது சீஷர்களுக்காகச் செய்த, இருதயத்தைத் தொடும் ஜெபமும் அவரால் எழுதி வைக்கப்பட்டுள்ளது (அதிகாரம் 17).

இந்தப்பகுதியின் ஆரம்ப கட்டத்தில், இயேசுவின் தெளிவான வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலை அப்போஸ்தலர்களுக்கில்லை. எனவே அதிகாரம் 13 இயேசு தமது சீஷர்களின் கால்களைக் கழுவுவதன் மூலம் தமது "மேல் துண்டில் இருந்து சில பாடங்களை" கற்பிக்கும் காட்சியோடு தொடங்குகிறது.[1] இயேசு தங்களுக்கு விடுக்கும் சவால்களைச் சந்திக்க அந்த சீஷர்களைத் தயார் செய்ய இந்தப் பாடங்கள் தேவையாய் இருந்தது. இந்நாட்களில் இயேசு நமக்கு விடு விக்கும் சவால்களுக்கு நம்மைத் தயார்ப்படுத்தக்கூட இப் பாடங்கள் நமக்கு தேவையாயுள்ளது.

## தாழ்மையின் பாடம் (யோவா. 13:1-5)

### இயேசு மேல்துண்டை எடுத்துக்கொண்டார்

யோவான் 13-17 அதிகாரங்கள் அன்பு என்ற கருத்தை மைய மாகக் கொண்டுள்ளன. இவ்வதிகாரங்களில் அன்பு என்ற வார்த்தை 31 முறை வருகின்றது. இவ்வதிகாரங்களுக்கும்,

இயேசு தமது சீஷர்களின் கால்களைக் கழுவும் நிகழ்ச்சிக்கும் யோவான் 13:1 ஒரு முன்னுரையாக அமைந்துள்ளது:

> பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்கு போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம் முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவு பரியந் தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்.

இயேசு நமக்கு அன்பு காட்டக் கற்பித்தபடி நாம் அன்பு காட்டுவோம் என்றால், அதற்கு யாருமே பதிலீடு செய்ய முடியாது.[2]

இந்த இராவிருந்து சமயத்தில், "சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு" என்ற ஒரு குறிப்பு வசனம் 2ல் உள்ளடங்கியுள்ளது. இந்த சமயத்தில் இக்குறிப்பு ஏன் தரப்பட்டுள்ளது? இன்னும் சற்றுநேரத்தில் யூதாஸ்காரியோத்து உட்பட எல்லா சீஷர்களின் கால்களையும் இயேசு கழுவப் போகிறார். இயேசு, யூதாஸ் தமக்குச் செய்யப் போவதை நன்கு அறிந்தவராகவே அவன் பாதங்களைக் கழுவினார், என்பதை நினைவில் வைக்க வேண்டும்.

வசனம் 3ல், "தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து" இவைகளைச் செய்தார் என்று கூறப்படுகிறது. தாம் எங்கிருந்து வந்தார், என்பதையும், தாம் யார், தாம் எங்கு செல்கிறார் என்பதையும் இயேசு அறிந்திருந்ததால், இயேசு ஒரு ஊழியக்காரராக இருக்கமுடிந்தது. பிரீச்சென் - பால்க்நெரின், "திருமணத்தின் சிறப்புக்கள்" என்ற திரைப்படத்தில், தன்னைப் பற்றி நன்றாக அறிந்த ஒரு மனிதனே அதாவது தான் யார் என்று உறுதியாய் உணர்ந்த ஒரு மனிதனே குப்பைகளை அள்ளி வெளியே கொட்ட முடியும் என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது. ஆனால் தங்களைப்பற்றி உறுதியாய் அறியாதவர்கள் இப்படிப்பட்ட வீட்டு வேலைகள் செய்தால் தங்களையே தாழ்த்துவதாகிவிடும் என்று எண்ணுகின்றனர். இயேசு தாம் யார் என்பதை அறிந்திருந்ததால் அவரால் ஊழியக்காரராக முடிந்தது.

"போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிகொண்டு" (வ. 4). டாவின்ஸியின் "கடைசி இராவிருந்து" என்று பெயரிட்ட ஓவியத்தில் இருப்பதுபோல இயேசுவும் அவருடைய சீஷர்களும் நாற்காலிகளில் அமர்ந்துகொண்டிருக்கவில்லை. மாறாக ஒரு மெல்லிய பாய் அல்லது துப்பட்டியில் தங்களது இடதுபாதம் கீழிருக்கும்வண்ணம் சாய்ந்து அமர்ந்து[3] வலது கையினால் உணவை உண்டுகொண்டிருந்தனர்.[4] ரொட்டியைப் பிய்த்து தங்கள்முன் வைத்திருந்த பாத்திரங்களில் இருந்த வற்றில் தொட்டு உண்டுகொண்டிருந்தனர். ஒரு தாழ்வான மேஜையைச் சுற்றிலும் இவ்வாறு இயேசுவும் அவரது சீஷர்களும் அமர்ந்து உண்பதையும், அவர்களது சரீரங்கள் அருகருகே இருந்ததையும் நீங்கள் கற்பனை செய்து பார்க்கையில்[5] அவர்களின் முகங்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருந்திருக்கும் என்பதை உணர முடியும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் இயேசு மேஜையை விட்டெழுந்து சீஷர்களின் கால்களைக் கழுவ ஆரம்பித்தார்!

அந்நாட்களில், கால்களைக் கழுவுதல் என்பது சமூகப் பழக்கமாக இருந்தது. ஒருவர் விருந்துக்குச் செல்வதற்கு முன்பாக நன்றாகக் குளித்து, தலைமுதல் கால்வரை சுத்தம் செய்து கொண்டு போவார். இருப்பினும் பலஸ்தீன நாட்டின் பாதைகள் மிகவும் அழுக்கு நிறைந்தவையாயிருக்கும் (மிருகங்களும் மனிதர்களும் யாவரும் அப்பாதைகளைப் பயன்படுத்தினர் என்பதை நினைவில் வையுங்கள்). மழைக் காலத்தில் சாலையில் சேறும் சகதியுமாயிருக்கும். அனைவரும் மிதியடியணிவதால், விருந்தாளி விருந்துக்கு அழைத்தவர் வீடுவந்து சேர்கையில் தலைமுதல் முழங்கால்வரை சுத்தமாயிருப்பார். ஆனால் முழங்காலுக்குக் கீழ் உள்ள பகுதி பொதுவாக அழுக்காகிவிடும். ஒரு நல்ல விருந்தளிப்பவர் தமது வீட்டின் நுழைவாயிலில் ஒரு பெரிய பாத்திரம் நிறையத் தண்ணீர் வைத்து, ஒரு ஜாடி, சிறு பாத்திரம் மற்றும் துவாலைகள் ஆகியவற்றையும் வைத்திருப்பார்.[6] ஒருவர் வீட்டிற்குள் நுழையும்போது, தமது மிதியடிகளைக் கழற்றுவார்,[7] யாரோ ஒருவர் வந்து அவரது கால்களைக் கழுவிவிடுவார். பொதுவாக இது கௌரவக் குறைவான வேலை என்பதால் அடிமைகளே இவ்வேலையைச் செய்தனர்.

அதிலும் எபிரெய அடிமைகளை இவ்வேலையைச் செய்யும்படி வற்புறுத்துவது தரக் குறைவாகும்; புறஜாதி அடிமைகளே இவ்வேலையைச் செய்யும்படி பணிக்கப்பட்டனர். ஒரு வேளை இவ்வேலையைச் செய்ய அடிமைகள் இல்லாத பட்சத்தில், விருந்தளிப்பவரே இவ்வேலையைச் செய்வார். விருந்தளிப்பவரும் இல்லையென்றபட்சத்தில் (மேல் வீட்டின் இச்சம்பவத்தில் போல) விருந்தாளிகள் ஒருவர் கால்களை ஒருவர் கழுவிக் கொள்வார்கள். கழுவாத கால்களுடன் உணவு உண்ண அமர்வதென்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்றாகும்.

பின்பு ஏன் கழுவாத கால்களோடு சீஷர்கள் மேஜையைச் சுற்றி அமர்ந்தனர்? அவர்கள் உணவு உண்கையில் "தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று" (லூக். 22:24) என்று லூக்கா கூறுகிறார். அவர்கள் பின்வருமாறு சொல்லிக்கொள்ளுவதை உங்களால் கேட்க முடிகிறதா? "நான்தான் முதலில் அழைக்கப் பட்டேன்" என்கிறார் அந்திரேயா! "நான் தான் அவருக்குப் பிரியமானவன்" என்கிறார் யோவான்! "என்னிடத்தில்தானே பணப்பை உள்ளது" என்கிறார் யூதாஸ்! "இராஜ்யத்தின் திறவு கோல்கள் என்னிடத்திலல்லவா தரப்படுவதாக வாக்களித் துள்ளார்" என்கிறார் பேதுரு! அந்த அறை கர்வமிக்க இருதயங் களாலும், கறைபடிந்த கால்களாலும் நிறைந்திருந்தது. அவர்கள் ஒரு பதவிக்காக அடித்துக்கொண்டனர் - மேல் துண்டிற்காக அல்ல! இப்படியாக அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் அழுக் கான கால்களை மற்றவர் முகத்திற்கெதிராக நீட்டினர்.

"போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக் கொண்டு" (வ. 4) என்ற வசனத்தின் பின்னணி இதுதான். நாம் நமது மேல் சட்டையைக் கழற்றிவைத்து, பேண்ட்டை மேல்நோக்கி மடக்கிவிட்டு வேலைக்குத் தயாராவதைப் போலத்தான் இயேசுவும் செய்தார்.[8] பின்பு அவர் ஒரு சீலையை அதாவது மேல்துண்டு ஒன்றை எடுத்துத் தம்மேல் சுற்றிக் கட்டிக் கொண்டார். இந்தத் துண்டு அவரது இடுப்பைச் சுற்றிக் கட்டி தொங்குமளவு நீளமாயிருந்திருக்கவேண்டும்: அதைக் கொண்டு அவர்கள் கால்களைக் கழுவினபின்பு துடைக்க

வேண்டியதாயிருந்தது.[9]

"பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷர்களுடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்" (வ. 5). இயேசு முழந்தாள் படியிட்டு தமது சீஷர்களின் கால்களை கழுவும் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள்![10] யார் பெரியவன் என்ற வாக்கு வாதம் உடனே நின்றுபோயிற்று; சிறிய பேச்சும் குறைந்தது; எல்லாக் குரல்களும் அமைதியாயிற்று. இயேசு கால்களைக் கழுவும் ஓசைமட்டும் அங்கு நிலவிற்று; தண்ணீர் ஊற்றுப்படும் சத்தமும், கால்களைத் தேய்த்துக் கழுவும் சத்தமும், முரடான துண்டினால் துடைக்கும் சத்தமும், அழுக்கு நீரை ஊற்றிவிட்டு, சுத்த நீரை பாத்திரத்தில் நிரப்பும் சத்தமும், இயேசு மூச்சுவிடும் சத்தமும் ஆகிய இவ்வோசைகள் மட்டும் கேட்டன! சீஷர்கள் ஒருவரையொருவர் குழப்பத்தோடு பார்த்துக்கொண்டு, வெட்கத்தினால் கண்களைத் தாழ்த்திக் கொண்டதை என்னால் கற் பனை செய்து பார்க்கமுடிகிறது.

இயேசு சீஷர்களின் வரிசைக்குச் சென்று ஒவ்வொரு ஜோடி பாதங்களையும் கழுவும்போது, ஊழியக்காரர்களாயிருப்பது பற்றி அவர்களுக்குக் கற்பித்தார். "நீங்கள் என் சீஷராயிருக்க விரும்பினால் நீங்கள் உங்களை தாழ்மைப்படுத்த விருப்ப முள்ளவர்களாயிருக்க வேண்டும்'' என்று அவர் கூறிக் கொண்டிருந்தார்.

இயேசு தாம் செய்ய விரும்பாத ஏதொன்றையும் தமது சீஷர்கள் செய்யும்படி கேட்கவில்லை. இயேசு பரலோகத் திலிருந்து வரும்பொழுது, "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, … அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு … தம்மைத் தாமே தாழ்த்தினார்" (பிலிப்பியர் 2:7-8). தமது ஊழியத்தைப்பற்றிப் பேசும்போது இயேசு, ''மனுஷ குமாரனும் ஊழியங்கொள்ளும்படிக்கு வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவ னைக் கொடுக்கவும் வந்தார்" (மாற்கு 20:28) என்றார். சீஷர்கள் தங்களில் யார் பெரியவன் என்று விவாதித்துக் கொண்டிருந்த போது, அவர் ''நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப் போல் இருக்கிறேன்" (லூக்கா 22:27) என்றார்.

**நாமும் "மேல்துண்டை எடுக்க" வேண்டியிருக்கிறது**

இந்நாட்களில், நாம் உதட்டளவில்தான் தாழ்மை என்ற கருத்தைப் பின்பற்றுகிறோம்; நாம் தாழ்மையாயிருக்க வேண்டும் என்று வேதம் நமக்குக் கற்பிக்கிறது என்பது நமக்குத் தெரியும். ஆனாலும், நம்மில் அநேகர் தாழ்மையைப் போற்றுவதோ, விரும்புவதோ கிடையாது என்பதே உண்மையாகும். ''பணிவு'' மற்றும் ''தாழ்மைப்படுத்துதல்'' என்ற இரு வார்த்தைகளும் ஒரே மூலத்தைப் கொண்டுள்ளன. அநேகமாக நீங்கள், ''நான் என் வாழ்க்கையில் என்றுமே இவ்வளவு தாழ்மைப்படுத்தப்பட்டதில்லை'' என்று யாரேனும் ஒருவர் சொல்லக் கேட்டிருப்பீர்கள். யாருமே தாங்கள் தாழ்மைப் படுத்தப்படுவதையோ, சிறுமைப்படுத்தப்படுவதையோ, சங்கடமுண்டாக்கப்படுவதையோ விரும்புவது கிடையாது. ஆனால் இதைப் புரிந்துகொள்ளுங்கள்: கால்களைக் கழுவுதல் என்பது தாழ்மைப்படும் ஒரு அனுபவமாகும்! மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்தல் என்பது பணிவு மற்றும் தாழ்மைப்படும் விஷயமாகக்கூடும்!

நம்மில் அநேகர் ''ஊழியக்காரர்'' என்று அழைக்கப்படுவதைப் பொருட்படுத்துவது இல்லை. "கர்த்தருடைய பெரிய ஊழியக்காரர்கள்'' என்று அறியப்படுவது நமக்கு உற்சாகமளிப்பதாயுள்ளது. ஆனால் ஊழியக்காரர்களாக நடத்தப்படுவதை நாம் விரும்புவதில்லை. புதிய ஏற்பாட்டின் காலத்தில் ஊழியக்காரர்கள் கேவலமாக கருதப்பட்டு, தவறாகப் பயன்படுத்தப்பட்டனர். ஊழியக்காரர்களை எவரும் பாராட்டுவது கிடையாது. ஊழியன் தனது வேலையை முடித்ததும் அவன் முதலாளி பாராட்டுவதை எங்காவது நாம் கேள்விப்பட்டுள்ளோமா? "நன்றி வேலைக்காரரே! நீங்கள் ஒரு பெரிய வேலையைச் செய்துள்ளீர்கள்! உண்மையாகவே உங்களைப் பாராட்டுகிறேன்'' என்று யாராவது சொல்லியுள்ளார்களா? இல்லவே இல்லை!

நாம் ஊழியக்காரர்களாயிருக்க விரும்புகிறோமா? மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய நம்மைச் தாழ்மைப்படுத்த விரும்புகிறோமா? மற்றவர்கள் யாரும் செய்ய விரும்பாத வேலைகளைச் செய்யும்படி நாம் விரும்புகிறோமா? மற்றவர்கள் நமக்கு உதவாவிட்டாலும், மற்றவர்கள் தங்கள் பங்கை

*நிறைவேற்றா விட்டாலும் நாம் நமது ஊழியத்தை நிறைவேற்ற விரும்புகி றோமா? மற்றவர்கள் பாராட்டுவதற்காக இல்லாமல், நாம் சரியானதைச் செய்யவேண்டும் என்பதற்காக நாம் ஊழியம் செய்யத் தயாராயிருக்கிறோமா?*

இப்படிப்பட்ட ஊழியம் மிகவும் கடினமானதாகும். கிறிஸ் தவப் பாடத்தில், தாழ்மையே மிகவும் கடினமான பாடமாகும் என்று ஒருவர் கூறியுள்ளார். ஆனாலும் இயேசு, நாம் அனை வரும் தாழ்மையின் பாடத்தைக் கற்க வேண்டும் என்றே விரும் புகிறார். பரிசேயருடைய தற்பெருமையை அவர் கண்டனம் செய்தபோது, "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களு க்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். தன்னை உயர்த்துகிற வன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த் தப்படுவான்" (மத். 23:11-12) என்றார்.[11] இந்த உலகம் உயர்த் தப்படுவதைத் தேடுகிறது! இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் ஊழியம் செய்ய வாய்ப்புத் தேடுகின்றனர்!

## பரிசுத்தத்தின் பாடம் (யோவா. 13:6-11)

**ஆவிக்குரிய சுத்தம் நமக்குத் தேவை**

சீஷர்களின் கால்களைக் கழுவுகையில் இயேசு 13Ds[12] (மிகப் பெரிய) அளவுள்ள ஒரு ஜோடி பாதங்களருகே வந்தார். அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: "ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா? என் றான்" (வ. 6). ஒரு அடிமையின் தாழ்மையான வேலையை இயேசு ஏன் செய்தார் என்று பேதுரு புரிந்துகொள்ள முடிய வில்லை.

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: "நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய். இனிமேல் அறிவாய் என்றார்" (வ. 7). இயேசு, "எனது மரணம், அடக்கம், உயிர்த் தெழுதல், பரத்துக்கேறுதல் மற்றும் ஆவியானவரின் வருகை யின்போது நீ புரிந்துகொள்வாய்" என்றார்.

அச்சமயத்தில் அவர் கூறியது புரியாததால் பேதுரு, இயேசு விடம், "நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப் படாது என்றான்" (வ. 8அ). மூலபாஷையில் இவ்வாக்கியத்தில் இரண்டு எதிர்மறைச் சொற்கள் உள்ளன. ஆங்கிலத்தில், இரு எதிர்மறைச் சொற்கள் ஒன்றையொன்று சரிசெய்து நேர்மறைச்

சொல்லாகும். ஆனால் கிரேக்க மொழியில், அவை எதிர் மறையை வலுப்படுத்தும். பேதுரு இவ்விடத்தில், "இல்லை, இல்லை நீர் ஒருபோதும் எனது பாதங்களைக் கழுவுவதில்லை" என்று கூறினார்.

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என் றார்" (வ. 8ஆ). இவ்விஷயத்தில் பேதுரு தன்னை இயேசுவிடத் தில் ஒப்புக்கொடுக்காவிட்டால், இருவரும் ஐக்கியமாயிருக்க முடியாது.

பேதுரு எதையுமே அரைகுறையாய்ச் செய்தது கிடையாது. அவர், "ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கை களையும், என் தலையையும்கூடக் கழுவவேண்டும் என்றான்" (வ. 9). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், "சரி ஆண்டவரே, என்னை முழுவதும் குளிப்பாட்டி விடும்: உம்மோடு ஐக்கிய மாவதற்கு என்னைத் தலைமுதல் கால்வரை கழுவியருளும்" என்றார்.

இயேசு அதற்கு பதிலாக: "முழுகினவன்[13] தன் கால்களை மாத்திரமே கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்" (வ. 10அ) என்று கூறினார். முன்பே கூறியபடி, விருந்திற்குச் செல்லுமுன்னர், விருந் தாளிகள் குளிப்பது வழக்கம். இப்படியாக அவர்கள் முழுவதும் சுத்தமாவதற்கு, மறுபடியும் பாதங்களைமட்டும் கழுவினால் போதுமானதாகும். பேதுருவின் சரீரத்திலும் மறுபடி கழுவ வேண்டியது அவரது பாதங்களை மட்டுமேயாகும்.

பிறகு இயேசு இரகசியமான ஒரு கருத்தைக் கூறுகிறார்: "நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்" (வ. 10ஆ). மூலபாஷையில் வ. 8ல் இயேசு "உன்னை" என்ற ஒருமைச் சொல்லையும் வ. 10ல் "நீங்கள்" என்ற பன்மைச் சொல்லையும் பயன்படுத்தியிருக்கிறார். (ஆங்கிலத்தில் "நீ" "நீங்கள்" என்பது எல்லாம் You என்றே குறிப்பிடப்படும். ஆனால் கிரேக்கத்தில் தமிழைப்போன்றே ஒருமைக்கும், பன்மைக்கும் வெவ்வேறு சொற்கள் உள்ளன). இவ்வாறாக, இயேசு, பேதுருவிடம் மட்டும் பேசுவதை விடுத்து எல்லா சீஷர் களிடமும் பேசத் தொடங்கினார். "நீங்களும் சுத்தமாயிருக் கிறீர்கள்" என்று அவர் தமது கரங்களை நீட்டி அவர்களது

சரீரங்களைச் சுட்டிக்காட்டிப் பேசியிருப்பார். பிறகு உடன டியாக ஆவிக்குரிய நிலையைச் சுட்டிக்காட்டி, கவலையுடன் "ஆகிலும் எல்லாரும் அல்ல" என்று கூறினார்.

இவர் எதைப் பொருள்படுத்திப் பேசினார் என்று நாம் யூகிக்கத் தேவையில்லாதபடிக்கு அடுத்த வசனம், "தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல" என்பது யூதாஸைக் குறித்தது. ஒருவேளை இது யூதாஸை மனந்திருப்ப இயேசு செய்த கடைசி முயற்சியாக இருக்கலாம்.

இயேசு தமது சீஷர்களின் கால்களைக் கழுவினபோது அவர் களின் சரீரத்துக்குரிய சுத்தத்தைப் பார்க்கிலும் ஆவியில் சுத்தத் தைப் பற்றியே அதிக அக்கறையாயிருந்தார் என்பதே நான் வலியுறுத்த விரும்பும் சத்தியமாகும். இதை மனதில் வைப்போ மானால், 8ம் வசனத்தில் இயேசுவின் கூற்று இன்னும் ஆழமான அர்த்தங்களைத் தரும்: "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை." ஆவிக்குரிய வகையில் இது நமக்கு உண்மையாயிருக்கிறது. இயேசுவின் இரத்தத்தி னால் நாம் கழுவப்படாவிட்டால் அவரோடு நாம் ஐக்கியம் கொள்ள முடியாது! வெளி. 1:5ல் இயேசு "நம்மிடத்தில் அன்பு கூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி" என்று கூறப்படுகிறது.

பாவிகளாய் வெறுக்கப்பட்டிருந்த நிலையில் நாம் ஞானஸ் நானத்தின்மூலம் இயேசுவின் இரத்தத்தில் கழுவப்பட வேண்டியதாயிற்று. அனனியா சவுலிடம், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22:16). என்றார். நாம் ஆவிக்குரிய வகையில் "தலைமுதல் கால்வரை" கழுவப்பட்ட பின்பு, தொடர்ந்து வாழ்க்கையில் நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். கிறிஸ்தவர்கள் என்ற முறையில் அன்றாடம் இயேசுவின் கரம் நம்மை சுத்தம் செய்வது நமது தேவையாகும்.

> நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங் களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவரா யிருக்கிறார். நாம் பாவஞ் செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்.

*அவருடைய வார்த்தை நமக்குள் இராது.*

*என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (1 யோவா 1:9–2:1).*

## நாம் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள வேண்டும்

நமது ஆத்துமாவை இயேசு கழுவுவதற்கு அனுமதிப்பதன் பல்வேறு அம்சங்களைப்பற்றி நாம் பேச முடியும். ஆனால் இவ்வசனப் பகுதியில் பேதுருவின் பாதத்தைக் கழுவினபோது இயேசு குறிப்பாக ஒன்றைத் தமது சிந்தையில் கொண்டிருக்க வேண்டும். அந்தக் "குறிப்பான ஒன்று" கீழ்ப்படிதல் ஆகும். பேதுரு சுத்தமாக வேண்டுமெனில், கர்த்தருடைய சித்தத் திற்குக் கீழ்ப்படிய வேண்டியதாயிருந்தது - அது அவருக்குப் பிடிக்கவில்லையென்றாலும், அதை அவர் ஒப்புக்கொள்ள வில்லையென்றாலும், அவர் அதைப் புரிந்துகொள்ளவில்லை யென்றாலும்- அவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டி யிருந்தது.

நம்மில் அநேகரைப் போன்றே, பேதுரு தற்பெருமையுடன் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார். பேதுரு இனிமேல் அதை அறிவார் என்று இயேசு கூறியது போல், மேல் துண்டி லிருந்து வந்த பாடங்களைப் பின்னாளில் அறிந்துகொண்ட பேதுரு:

> *அந்தப்படி இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள், நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத் தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர் களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர் களுக்கோ கிருபையளிக்கிறார்.*
>
> *ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும் படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1 பேதுரு 5:5-6).*

நீங்களும் நானும் இயேசுவின் இரத்தத்தினால் தொடர்ந்து கழுவப்படவேண்டும் என்றால், கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை வாழ வேண்டும்: "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளி யிலே நடந்தால் (நாம் இயேசுவைப்போலவே வாழ்ந்தால்) ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய

*குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் (தொடர்ந்து) சுத்திகரிக்கும்"*[14] *(1 யோவான் 1:7).*

## சந்தோஷத்தின் பாடம் (யோ. 13:12-17)

**நாம் "கால்களைக் கழுவ" கற்றுக் கொள்ள வேண்டும்**

கடைசி பாதம் கழுவப்பட்டது; கடைசி குதிகால் உலர வைக்கப்பட்டது. இயேசு தாம் செய்ததுபற்றியும், அதை அப்போஸ்தலர்கள் நடைமுறைப்படுத்தவேண்டிய விதம் பற்றியும் விளக்கம் தரத் தயாரானார். *"அவர்களுடைய கால்களை அவர் கழுவின பின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு திரும்ப உட்கார்ந்து"* (வ. 12அ). இயேசு, பாத்திரம் முதலியவற்றை வைத்துவிட்டு, தமது வஸ்திரங்களை மறுபடி தரித்துக்கொண்டு அவர்களுடன் பேசத் தொடங்கினார்.[15] ஒவ்வொரு கண்ணும் இயேசுவின்மேல் இருந்தது; அப்போஸ்தலர்களின் முழு கவனமும் அவர் மேலிருந்தது.

உணவு மேஜையில் அவரது இடத்திற்குத் திரும்பினபிறகு, இயேசு, *"நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?"* என்றார் (வ. 12ஆ). "இது என்ன வினோதமான கேள்வி! நீங்கள் செய்ததை உறுதியாய் அறிகிறோம். நீர் எங்களுடைய கால்களைக் கழுவினீர்" என்று அவர்கள் பதில் கூறியிருக்கலாம். இருப்பினும் இயேசு அவர்களிடம், "நான் செய்தது என்ன என்பதை உண்மையில் அறிந்தீர்களா? நான் என்ன செய்தேன், ஏன் அதைச் செய்தேன் என்று புரிந்து கொண்டீர்களா?" என்றுதான் அவர்களிடம் கேட்டார்.

தமது செயலின் பயன்பாட்டைப் பின்பு இயேசு தொடங்கினார்: *"நீங்கள் என்னைப் போதகரென்றும்,*[16] *ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்"* (வ. 13-14). ஒருவேளை அவர், "நீங்களும் என்னுடைய கால்களைக் கழுவக்கடவீர்கள்" என்று அவ்வாக்கியத்தை முடிப்பார் என்று எதிர்பார்த்திருப்பார்கள். அதுவே நியாயமானதாகும். அவர் 24 அழுக்கான கால்களை,

120 அழுக்கான விரல்களைக் கழுவினார், ஆனால் அவரது சொந்தக்கால்கள் இன்னும் அழுக்காயிருந்தன. அப்போது இயேசுவின் கால்களைக் கழுவிவிடுவதே நியாயமானதாக இருந்திருக்கும். (நம்மில் அநேகர் இயேசுவின் கால்களைக் கழுவத் தயங்காமல், வரிசையில் நிற்கக்கூடத் தயாராயிருப் போம்!). மாறாக, இயேசு, "நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள், நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (வ. 14-15) என்றார்.

நாம் கால்களைக் கழுவிவிடும்படி இயேசு விரும்புகிறாரா? அது ஒருவேளை நலமாயிருக்கலாம். நமது நண்பர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து, நாம் ஒருவருக்கொருவர் பாதங் களைக் கழுவிக்கொள்ளலாம். ஒரு நிமிடம் பொறுங்கள்: இயேசு "நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும் படி" என்று கூறினார். மற்ற சீஷர்களோடு யூதாஸும் அங்கிருந் தான். யூதாஸின் பாதங்களை இயேசு கழுவியதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இயேசு தம்மை யூதாஸ் காட்டிக் கொடுக்கப் போவதுபற்றி முன்னமே அறிந்திருந்தார். ஒரு வேளை நானாக இருந்திருந்தால் கொதி நீரையோ அல்லது பனிக்கட்டிகளையோ அவன் பாதங்களில் கொட்டும்படி சோதிக்கப்பட்டிருப்பேன்! அவன் பாதத்தைத் துடைக்கும் போது, தோலை உரிக்க முற்பட்டிருப்பேன்! ஆனாலும் இயேசு மற்ற சீஷர்களின் பாதங்களுக்குக் காட்டின அதே பரிவை யூதாஸின் பாதங்களுக்கும் காட்டினார்.[17] இயேசுவின் இவ் வுதாரணம், என்னைப்பொறுத்தமட்டில், நண்பர், எதிரி ஆகிய இரு சாராருடைய "பாதங்களையும் கழுவ" நாம் தயாராயிருக்க வேண்டும் என்பதேயாகும்.

இயேசு தொடர்ந்து: "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானி லும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பின வரிலும் பெரியவனல்ல" (வ. 16). சாக்குப் போக்கு சொல்லக் கூடாத நிலையில் இயேசு நம்மை நிறுத்தியுள்ளார். அவர் சிநே கிதர், எதிரி என்று எல்லோருடைய பாதங்களையும் கழுவக் கூடுமென்றால் நாமும் அதுபோலவே செய்யக்கூடும்.

''நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்

கடவீர்கள் என்று இயேசு கூறியதன் பொருள் என்ன?" என்று நாம் ஒரு வேளை கேட்கக்கூடும். ஆராதனையில் கால்களைக் கழுவும் சடங்கும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று பொருள் படுமா? சில மார்க்கப் பிரிவுகளில் இதைச் செய்கின்றனர். அவர்கள் (காலாண்டிற்கொரு முறையோ, ஆண்டிற்கொரு முறையோ, அல்லது எப்பொழுதாவதோ)[18] கர்த்தருடைய இராப் போஜனத்தை ஆசரிக்கும்போது, கால்களைக் கழுவும் சடங்கு ஒன்றையும் அவர்கள் செய்கின்றனர். இதற்குத் தேர்வு செய்யப் பட்டவர்கள் சுத்தமான கால்களில், துளையற்ற காலுறை யணிந்து, அதற்கு மேல் நன்கு பளபளப்பாக்கப்பட்ட பூட்ஸு களை அணிந்து கொண்டு வருகின்றனர். அந்தச் சடங்கின் போது, கால்களைக் கழுவுகிறவர், ஏற்கனவே சுத்தமாக உள்ள கால்களைக் கழுவுகின்றார். அதன் மூல நோக்கம் - கால்கள் அழுக்காயிருப்பதினால் கழுவுகிறது என்பது -தொலைந்து போய் விடுகிறது!

இதைத்தான் இயேசு கட்டளையிட்டாரா? புதிய ஏற்பாட்டின் மீதமுள்ள பகுதியை ஆராய்ந்து பாருங்கள்! ஆதிக் கிறிஸ்தவர்களின் எழுத்துக்களைப் பரிசோதனை செய்து பாருங்கள். ஆதி சபையில் இவ்விதமான சடங்கு எதுவும் கைக்கொள்ளப்படவில்லை. கால்களைக் கழுவுதல்பற்றிக் குறிப்பிடும் ஒரே இடம் 1 தீமோத்தேயு 5:9-10 ஆகும். இதிலும், சபை உதவி செய்யக்கூடிய விதவைகளுக்கு இருக்கவேண்டிய பண்புகளில் ஒன்றாகவே இது குறிப்பிடப்படுகிறது.

> அறுபது வயதுக்குக் குறையாதவளும், ஒரே புருஷனுக்கு மனைவியாயிருந்தவளுமாகி, பிள்ளைகளை வளர்த்து, அந்நியரை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களைக்கழுவி, உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவிசெய்து, சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து இவ்விதமாய் நற்கிரிகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவளுமாயிருந்தால், அப்படிப்பட்ட விதவையையே விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

அநேக தகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டு ஆராதனையில் அதைத் தொடர்புபடுத்தினால், மற்ற எல்லாவற்றிலும் கூட ஆராதனையோடு நாம் தொடர்புபடுத்தியாக வேண்டும். இயேசு கூறியது இதுவல்ல.

இயேசு ஒரு விசேஷ சடங்கை குறிப்பிடவில்லையென்றால்

ஒருவர் கால்களை ஒருவர் கழுவவேண்டும் என்று கூறியதன் மூலம் எதனை அர்த்தப்படுத்துகிறார்? ஊழியரும் எழுத்தாள ருமான சார்லஸ் ஹோட்ஜ் என்பவர், "கால்களைக் கழுவுதல் பற்றிய பட்டிமன்றத்தில் நாம் வென்றிருக்கலாம்; ஆனால் இன்னும் நாம் கால்களை கழுவக் கற்றுக்கொள்ளவில்லை'' என்று சரியாகச் சொன்னார். புதிய ஏற்பாட்டின் காலங்களில் கால்களைக் கழுவுதல் என்பது வேலைக்காரர்கள் செய்கின்ற கீழான ஒரு பணியாய் இருந்தது. இந்த நூற்றாண்டில் இது - யாராக இருப்பினும், என்ன விலையாயினும் எவ்வளவு மகிழ்ச் சியற்றதாய் இருப்பினும் - மற்றவர்களுக்கு நாம் ஊழியம் செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கும்.

''நான் வியப்படைகிறேன்'' என்ற கவிதையில், அதை எழுதிய ரூத்ஹார்ம்ஸ் காக்கின் என்ற பெண்மணி கேட்கும் ஒரு கேள்வியை, நாம் கேட்கவேண்டியது அவசியமாகிறது:

*உமக்கு நான் ஊழியம் செய்ததை உண்மையாய் நீர் அறிவீர்*
*கர்த்தரே!*
*உணர்வுப்பூர்வமாக உள் வெளிச்சத்துடன்.*
*உற்சாகத்துடன் உமக்காய் பேசினேன் பெண்கள்*
*கூட்டத்தில்.*
*ஐக்கியக் குழுவைக் கூட்டினபோது நான்*
*ஆர்த்தெழுந்த விதம்பற்றி நன்கறிவீர்.*
*வேதபாட வகுப்பில் எனது விலையேறிய*
*உற்சாகத்தை நீர் அறிவீர்.*

*ஆனாலும்,*
*நீர் ஒரு நீர்ப்பாத்திரத்தை எனக்குக் காட்டி,*
*நிமிர இயலாத முதியவள் ஒருத்தியின்*
*அழுக்கு நிறைந்த பாதங்களை*
*அன்றாடம் மாதக்கணக்கில்*
*ஆள் யாரும் காணாத அறையில்*
*அடுத்தவர் அறியாத வகையில்*
*கழுவச் சொன்னால்*
*எனது பதில்செயல் என்னவாயிருக்கும் என்று*
*நான் வியப்படைகிறேன்?*[19]

நாம் ஊழியம் செய்யக் கற்றுள்ளோமா? தாழ்மையான, ஏற் பில்லாத, சந்தோஷமற்ற பொறுப்புகளை ஏற்றுச் செய்யத் தயாராயிருக்கிறோமா? இப்படிப்பட்ட வேலைகளுக்குப் பெரும்பாலும் ஜனங்கள் நன்றி சொல்லுவதில்லை. மாறாக, நம் மனதைப் புண்படச் செய்வார்கள். யூதாஸின் பாதங்களை

இயேசு கழுவியபின்னரும் கூட, அவன் மேல்வீட்டிலிருந்து வெளியேறி, அவரைக் காட்டிக்கொடுத்தான். இருப்பினும் இயேசு, "நீங்கள் ஒருவர் கால்களை ஒருவர் கழுவுங்கள்" என்று நம் ஒவ்வொருவரிடமும் கூறினார்!

''உங்களுக்காக எத்தனைபேர் வேலை செய்கின்றனர்?'' என்று இந்த உலகம் கேட்கிறது, "நீங்கள் எத்தனைபேருக்கு வேலை செய்கிறீர்கள்?" என்று கர்த்தர் கேட்கின்றார். நம்மில் அநேகர், முழங்காலிலிருந்து கால்களைக்கழுவி ஊழியம் செய்ய வேண்டிய நேரத்தில், கௌரவத்துடன், கைகளைக் கட்டிக் கொண்டு நின்று கொண்டிருக்கிறோம்.

**"கால்களைக் கழுவுதல்" சந்தோஷத்தின் திறவுகோல் ஆகும்**

"இதில் எனக்குள்ளதென்ன?" என்று நம்பிக்கையற்றவர்கள் அறிய விரும்புகின்றனர். ஊழியம் செய்யக் கற்றுக்கொள்வது நமக்கு என்ன செய்யக்கூடும் என்பதை வசனம் 17 நமக்குச் சொல்லுகிறது. "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர் கள்." வசனம் 12ல் "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக் கிறீர்களா?" என்று இயேசு கேட்டார். அவர்கள் அதை அறிந் திருப்பார்கள் என்ற எண்ணத்தில், உண்மையில் அவர், "உங்கள் அறிவு செயல்பாட்டிற்கு வந்தால் பாக்கியவான்களாயிருப்பீர் கள்" என்றார். நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று அறிந்திருந்தால்மட்டும் போதாது; தேவன் நம்மை ஆசீர்வதிக்கவேண்டுமானால் அதை நாம் செய்யவும் வேண்டும்.

இவ்வசனத்தில் நான் வலியுறுத்த விரும்பும் வார்த்தை ''பாக்கியவான்கள்'' என்பதாகும். மலைப் பிரசங்கத்தின் முற்பகுதியில் (மாற். 5:3ff) இதே வார்த்தைகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. இதற்கு இணையான கிரேக்க வார்த்தை யானது - வெளிப்புறச் சூழ்நிலைகளால் பாதிக்கப்படாத உள்ளான சந்தோஷம், மகிழ்ச்சி மற்றும் சமாதானத்தைக் குறிப்பதாயிருக்கிறது. இதன் KJV மொழி பெயர்ப்பை நான் அதிகமாய் விரும்புகிறேன்: "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிற படியினால், இவைகளைச் செய்வீர்களானால் சந்தோஷமா யிருப்பீர்கள்." ஊழியம் செய்யக் கற்றுக்கொள்வதே ஆழமான, என்றும் தங்கியுள்ள சந்தோஷத்தின் இரகசியமாகும்.

ஊழியம் கொள்ள விரும்புகிறவர்கள் மிகவும் பரிதாபத்திற்குரிய மக்களாவார்கள். அவர்கள், தாங்கள் நன்றாய் நடத்தப்படவில்லையென்றும், தங்கள் தகுதிக்கேற்றது கிடைக்கவில்லையென்றும் எண்ணுகின்றனர். யாரேனும் அவைகளைத் தங்களுக்குத் தர வேண்டும் என்று அவர்கள் காத்திருக்கின்றனர், அவர்கள் மிகப் பரிதாபமானவர்கள்! தங்கள் சந்தோஷத்தையல்ல மற்றவர்களின் சந்தோஷத்தை, தங்கள் நலத்தையல்ல மற்றவர்களின் நலத்தை நாடுபவர்களே நிலைவரமான சந்தோஷமுள்ளவர்களாய் இருக்க முடியும். இது மேல்துண்டிலிருந்து கிடைக்கும் மிகவும் முக்கியமான பாடம் ஆகும்.

## முடிவுரை

மேல்துண்டிலிருந்து இன்னும் வேறு சில பாடங்களும் நாம் பெறக்கூடும். ஆனால் தாழ்மை, பரிசுத்தம் மற்றும் சந்தோஷம் என்னும் இம்மூன்று பாடங்களும் மற்ற எவற்றைக் காட்டிலும் மிகவும் முக்கியமான பாடங்கள் ஆகும்.

ஊழியம் செய்தல் குறித்து நாம் ஒவ்வொருவரும் சில துளைக்கும் கேள்விகளை கேட்பது அவசியம்: நான் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறேனா? நான் எனது சக மனிதருக்கு ஊழியம் செய்கிறேனா? நாளுக்கு நாள் நல்ல ஊழியக்காரனாக நான் வளர்ந்து தேறுகிறேனா?[20]

கீழ்ப்படிதல்பற்றி நம்மை நாமே சில வினாக்கள் கேட்டுக்கொள்வதும் அவசியமாகும்: கர்த்தர் கட்டளையிடும்போது உடனே அவருக்குக் கீழ்ப்படிகிறோமா? அல்லது பேதுருவைப் போல, "இல்லை கர்த்தாவே ஒருபோதும் இல்லை" என்று முதலில் சொல்லிவிடுகிறோமா? பேதுருவின் இரண்டாவது பதிலில் நாம் கற்க வேண்டிய தேவை உள்ளது: "கர்த்தரே உமது சித்தத்தை என்னில் நிறைவேற்றும்! தலைமுதல் கால்வரை என்னைக் கழுவியருளும்."[21] தேவனே! மேல்துண்டிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள எங்களுக்கு உதவும்.

---

குறிப்புகள்

[1]இப்பாடத்தைப் பற்றிய ஒரு பக்கப் புறக்குறிப்பு "புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சி" என்று தலைப்பிடப்பட்ட இன்றைக்கான சத்தியத்தின் விசேஷ பதிப்பில் உள்ளது (ஜூலை 1993), 10. [2]வியாதிப்பட்ட அல்லது வயதான பெற்றோரைக் கவனித்தல் போன்ற சொந்த விளக்கங்கள் இத்துடன் சேர்த்துக் கொள்ளப்படலாம். [3]இயேசு

தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவும் செயலை நான் பின்னால் விளக்கவேண்டியிருப்பதால், இவ்விடத்தில்: இவ்வமைப்பை நான் உங்களுக்கு விளக்கிக் காட்டுகிறேன்; "ஆனால் பிற்பாடு நான் கீழிறங்க முடியாதென்று முடிவு செய்கிறேன், இறங்கினாலும் மறுபடியும் ஏறமுடியாதோ என்று எண்ணுகிறேன்" ஆனால் ஒரு இளம் வயதுள்ள, உற்சாகமுள்ள போதகர் ஒருவர் இதை அப்படியே செய்து காண்பிக்க முடியும். [4]சாப்பிடும் உபகரணங்களை எதுவும் பயன்படுத்தாமல் அவர்கள் தங்கள் கைகளினாலேயே உணவை எடுத்து உண்டனர். [5]அவருடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் (யோவான்) இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தான் எனப்படுகிறது (யோவான் 13:23). [6]இயேசு மற்றும் அவருடைய சீஷர்களுக்கு மேல்வீட்டை உபயோகிக்கக் கொடுத்தவர், இவ்வசதிகளை ஏற்படுத்தி வைத்திருப்பார் என்று நாம் யூகிக்கிறோம். இராவுணவுக்கு ஆயத்தம்பண்ணச் சென்றவர்களிடம் இயேசு "அவன் கம்பளம் முதலானவைகள் விரித்து ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற விஸ்தாரமான மேல் வீட்டறையை உங்களுக்குக் காண்பிப்பான்" (மாற்கு 14:15) என்றார். [7]ஓரியன்ட் மற்றும் ஐரோப்பா இன்னும் உலகின் பல பகுதிகளில் இன்றும் இந்த வழக்கம் பின்பற்றப்படுகிறது. [8]நான் எனது மேல்கோட்டைக் கழற்றி வைத்து, சட்டையின் கைப்பகுதியை சுருட்டி விட்டுக் கொண்டேன். [9]எனது இடுப்பைச்சுற்றி அதன் பின் தொங்கும் அளவு நீளமான மேல் துண்டு என்னிடத்தில் இல்லை! எனவே ஒரு சாதாரண மேல் துண்டை எடுத்து எனது கால் சட்டையின் இடுப்புப் பகுதியில் செருகிக்கொண்டு மீதியுள்ள பாகத்தைத் தரையில் தொங்க விட்டேன். [10]ஒரு காலால் முழங்கால்படியிட்டு கால்களைக் கழுவுவதுபோல் நடித்துக் காட்டினேன்.

[11]யாக்கோபு 4:6ஐயும் பாருங்கள். [12]அமெரிக்காவில் 13D என்பது மிகப் பெரிய கால் அளவு எனப்படுகிறது. உலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் செருப்புகள் செய்ய வெவ்வேறு விதத்தில் அளவுகள் மேற்கொள்ளப்படுவதால், உங்கள் ஊரில் உள்ள அளவீட்டை இவ்விடத்தில் கேட்பவர்கள் புரிந்துகொள்ளும்படி கூறலாம். [13]KJVயில் கழுவினவன் என்றுள்ளது. ஆனால் இவ்விடத்தில் பயன்பட்டுள்ள கிரேக்க வார்த்தை முழுகினவன் என்று பொருள்படும் வார்த்தையாகும், முழுகுதல் என்பது எந்த அளவு கழுவினார் என்பதைக் குறிக்கிறது. [14]மூலபாஷையில் "சுத்திகரிக்கும்" என்ற வார்த்தை நிகழ்கால வினைச் சொல்லாயிருக்கிறது. கிரேக்க மொழியில் இது தொடர் வினையைக் குறிக்கிறது. [15]இச்சமயத்தில் நான் மேல்துண்டை எடுத்துவிட்டு எனது மேல் கோட்டை மறுபடியும் எடுத்து அணிந்துகொண்டேன். [16]KJVயில் எஜமான் என்றுள்ளது இது பழைய ஆங்கிலத்தில் பள்ளி ஆசிரியரைக் குறிக்கப் பயன்பட்ட சொல் ஆகும். [17]யூதாஸ்தான் காட்டிக் கொடுப்பான் என்று எந்த ஒரு சீஷனும் கருதவில்லை என்பதை நினைத்துக் கொள்ளுங்கள் (யோவான் 13:28). இயேசு யூதாஸை வித்தியாசமாக நடத்தியிருந்தால், அவர்கள் அதைக் கவனித்திருக்கக்கூடும். [18]புதிய ஏற்பாட்டில் நாம் வாரந்தோறும் இதை ஆசரிக்கவேண்டும் என்று கூறப் படுகிறது (அப். 20:7). [19]"உன்னதத் தன்மையின் சவால்கள்" என்ற ரிச்சர்ட் ரோஜர்ஸின் விளக்கவுரையிலிருந்து இந்தக் கவிதையை நான் பெற்றேன். இவ்விளக்கவுரை அவரால் அர்க்கான்ஸாஸில் உள்ள சியார்ஸியின் ஹார்டிங் பல்கலைக் கழகத்தில் மார்ச் 4, 1994ல் நிகழ்த்தப்பட்டது. [20]ஒரு பிரசங்கத்தில், இவ்விடத்தில் நான், "நாம் ஊழியம் செய்யும் சபையாக ஆகிக்கொண்டிருக் கிறோமா?" என்றும் கேட்டேன். [21]இவ்வார்த்தைகள் இயல்பாகவே அழைப்பைக் குறிப்பதாயுள்ளன.